## ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப்பொருள்

**11.12.2020ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற அவசரக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**பொருள் எண்.01)** ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21-ன் கீழ் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| ஆற்காடு | 4.00 | 3.60 | 0.40 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | சாலைகளின் நீளம்(கி.மீ) | சுாலைகளின் அகலம் (மீ) | மதிப்பீடு தொகை(ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம் –I**<br>வார்டு எண்.18 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி II ல் , வார்டு எண்.9 கோட்டை மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் பணி, மற்றும் வார்டு எண்.28 பூபதி நகர், வார்டு எண்.6 வாத்தியார் கோவிந்தராஜ் தெரு, வார்டு எண்.01 ஜெகன்னாதசுவாமி தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை ,மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.600 | 4.00 முதல் 5.00 வரை | 200.00 |
| 2 | **சிப்பம் –II**<br>வார்டு எண்.19 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி I ,வார்டு எண்.20 பார்த்தீபன் நகர் மற்றும் வார்டு எண்.9 தனபால் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை ,மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.800 | 5.00 முதல் 6.00 வரை | 200.00 |
| **மொத்தம்** | | 5.400 | | 400.00 |

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க. எண்.2283/2020/இ1
**தீர்மான எண்.233– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**ஆற்காடு**
**நாள்: 11 .12.2020**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி**

## ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப்பொருள்

**31.12.2020ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர்(கூ.பொ) அவர்களின் நவம்பர்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
**அ.கு.** 1) மன்றம் பதிவு செய்யலாம்.
ந.க.எண்.0665/2018/சி1
**தீர்மான எண்.234– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின நவம்பர்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
**அ.கு.** 1) மன்றம் பதிவுசெய்யலாம்.
**தீர்மான எண்.235– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.03)** இந்நகராட்சியில் பணிபுரியும் கடைநிலை உழியர்களான தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், குடிநீர் மற்றும் மின் களபணியாளர்கள், காவலாளிகள், மகபேறு உதவியாளர் (ம) ஆயா, சங்கிலியாள், ஒட்டுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு 2021ம் வருடத்திற்குண்டான சீருடைகள் அதற்கான தையல் கூலி மற்றும் காலணிகளை பொங்கள் திருநாள் முன்னிட்டு வழங்க வேண்டியுள்ளதால், இதற்காக அரசு அங்கீகாரம் பெற்ற பதிவுபெற்ற கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு விற்பனை அங்காடிகள் மூலமாக இருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு தோராயச்செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு 2021ம் வருடத்திற்குண்டான சீருடைகள் அதற்கான தையல் கூலி மற்றும் காலணிகள் வழங்க வேண்டியுள்ளதால் இதனை விலைப்புள்ளி கோரி கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் வாங்கி பணியாளர்களுக்கு வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2020/2020/எச்1
**தீர்மான எண்.236– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.04)** இந்நகரட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்பாட்டில் இருந்து பழுதாகியுள்ள 20 எண்ணிக்கையிலான மூன்று சக்கர கை வண்டிகளை பழுதுக்களை ஒப்பந்தப்புள்ளி கோரி நீக்க இந்நகராட்சியின் நிர்வாக அனுமதி 02.11.2020ம் நாளில் தொகை ரூ.100 இலட்சத்திற்கு பெறப்பட்டதற்கு, 02.12.2020ம் நாளில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு பெறப்பட்டமைக்கு ஒப்புநோக்கு பட்டியலில் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | ஒரு கை வண்டியினை பழுதுக்களை நீக்கும் செலவு ரூ. |
|---|---|---|
| 1 | கிரின்வேல்டு, ஆற்காடு | 4999.00 |
| 2 | திரு.ஜே.சரவணன், ஆற்காடு | 5750.00 |

அ.கு:– 1) மன்றப்பொருள் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை தோய்வில்லாமல் நடத்த **20** கை வண்டிகள் பழுதடைந்துள்ளதால் இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.1ல் காணும் கிரின்வேல்டு, ஆற்காடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை எற்று பணிக்கான உத்திரவு வழங்க மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்காணும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1800/2020/எச்1

**தீர்மான எண்.237– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.05)** ஆற்காடு நகராட்சி சென்னை உயர்நீதிமன்றம் வழக்க எண். WP.No.15380/2020ல் பாரதி ஏர்டெல் நிறுவனம் நகராட்சி ஆணையர் ஆற்காடு அவர்களின் மீது வழக்க தொடர்ந்துள்ளார் அவ்வழக்கு சம்மந்தமாக சென்னை உயர்நீதிமமனறத்தில் நகராட்சியின் சார்பாக திரு.ஆனந்த், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் Counter Affidavit தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் வழக்கு கட்டணமாக ரூ.**15000/– 12.11.2020** அஅனறு கடிதம் வழங்கியுள்ளார். அவ்வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு:– அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1903/2020/எப்1

**தீர்மான எண்.238– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.06)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவுமேலாண்மை திட்டத்திற்கு பயன்பாட்டில் உள்ள கனரக வாகனம் ஜே.சி.பி TN73 AV4824 திடீர் பழுது ஏற்பட்டதால் இதனை உடனடியாக இப்பழுதினை நீக்கம் செய்ய அதன் சம்மந்தப்பட்ட நிறுவனமான டாட்டா இட்டாச்சி சென்னை எஸ்.எஸ்.எஸ் இக்யூப்மென்ட், பி.லெட், வேலூர் மூலம் பழுதினை மேற்கொண்டபோது வாகனத்தில் ஒயரிங் மற்றும் ஆயில் குறைவாக உள்ளதை கண்டறிந்து சரிசெய்யப்பபடடது. எனவே, இதற்கான செலவினத் தொகை ரூ**–4172/–**ஐ சுகாதார ஆய்வாளர் திரு.மு.செல்வவாஜ் அவர்களால் மேற்கொண்டதினால் இதனை திருப்பி வருங்குமாறு கோரியுள்ளதற்கு மேற்படி செலவினத் தொகை ரூ**–4172/–**க்கு மன்ற அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அ.கு:– **1)** மன்றம் அனுமதி வழங்கலாம்

2) கனரக ஜே.சி.பி TN73 AV4824 திடீர் பழுது ஏற்பட்டதால் இதனை நிர்வாக நலன் கருதி உடனடியாக அதன் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் பழுதினை நிவர்த்திச் செய்ய துப்புரவு ஆய்வாளர் அவர்களால் செலவினத்தை மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களனி ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) பழுதின் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2380/2020/எச்1

**தீர்மான எண்.239– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.07)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவுமேலாண்மை திட்டம், பொது சுகாதாரம், மழை நீர்சேகரிப்பு, பருவமழை மற்றும் கொரோனா வைரஸ் குறித்த இந்நகர பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருவார தேசிய சுடர் செய்தித்தாளான தமிழ் நாளிதழில் **14.11.2020**ம் நாளில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு செலவினத்தொகை ரூ.**16,000/–**ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அ.கு:– **1)** மன்றம் அனுமதி வழங்கலாம்

2) பொதுசுகாதாரப் பிரிவு மற்றும் தொற்று நோய்க்கான விழிப்புணர்வு செய்தித்தாளி. விளம்பரம் செய்யப்பட்டமைக்கு மமனற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) விளம்பர செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2319/2020/எச்1

**தீர்மான எண்.240– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.08)** இந்நகராட்சி எல்ல.குட்பட்ட பகுதிகளில் முத்திருத்தகம், அழகு நிலையம், ஸ்பா மசாஜ் நிலையம் நடத்துவரிடமிருந்து தொழில் உரிமம் விதிக்குமாறு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அழகு நிலையங்களுக்கு தொழில் உரிமம் விதிக்க இராணிப்பேட்டை மாவட்ட அளவிலான ஒரு தினசரி நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் ஒரு நாள்மட்டும் தமிழ் மற்றும் ஆங்கிலம் வடிவத்தில் ஆகிய இரு வடிவங்களிலும் விளம்பரம் செய்ய வேண்டி இதற்கான செலவினத் தொகை ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) நகராட்சி நிர்வாக ஆணைய., சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்டப் பகுதிகளில் முடித்திருத்தகம், அழகு நிலையம், ஸ்பா, மசாஜ் நிலையம் நடத்துவரிடமிருந்து தொழில் உரிமத்தினை விதிக்க இராணிப்பேட்டை மாவட்ட அளவிலான தினச் செய்தித்தாளில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்ய மன்ற முன் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) விளம்பரம் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலம்.

ந.க.எண்.2372/2020/எச்1

**தீர்மான எண்.241– மன்றப்பொருள் அனுமதி வழங்கப்பட்டது**

**ஆற்காடு** **தனி அலுவலர்,**

**நாள்: 31 .12.2020** **ஆற்காடு நகராட்சி**